[2013 அக்டோபர் 29

சக்தி மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்குக் கொண்டு சென்று, நலிந்த பஞ்சாலைகளைச் சரிசெய்யவும், நிதிநிலையையும் சரி செய்யவும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி எனது சார்பாகவும், அம்பாசமுத்திரம் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

57—

பேருந்து வசதி

*****22129**—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து சேலம் வழியாக கோயம்புத்தூருக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து சேலத்திற்கு நாளொன்றுக்கு 26 பேருந்துகள்மூலம் 55 நடைகளும், சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்கு 77 பேருந்துகள்மூலம் 165 நடைகளும், குறுகிய நேர இடைவெளியில் இயக்கப்பட்டு வருகின்றன. சிதம்பரத்திலிருந்து சேலம் வழியாக கோயம்புத்தூர் செல்ல போதிய பேருந்து வசதிகள் உள்ளன. சிதம்பரம் தொகுதியில் இரண்டு ஆண்டுகளில் 20 புதிய வழித்தடப் பேருந்துகளைத் தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிதம்பரத்திலிருந்து சேலம் வழியாக கோயம்புத்தூருக்கு நேரடிப் பேருந்து இயக்க

2013 அக்டோபர் 29]

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சிதம்பரத்திலே இருந்து சேலத்திற்கு அதிகமான பேருந்துகளும், சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்கு அதிகமான பேருந்துகளும் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். சிதம்பரம் ஓர் ஆன்மீக நகரம். சுற்றுலா நகரம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே 40,000 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கோவை ஒரு சிறந்த தொழில் நகரமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே, சிதம்பரத்திலிருந்து மற்ற முக்கிய நகரங்களுக்கெல்லாம் நேரடியாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால், கோயம்புத்தூர் என்கிற தொழில் நகரத்திற்கு நேரடியாகப் பேருந்து இயக்கப்படவில்லை. எனவே, சிதம்பரத்திலிருந்து சேலத்திற்குச் சென்று, சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்குச் செல்வதைவிட சிதம்பரத்திலிருந்து நேரடியாகவே கோயம்புத்தூர் செல்வதற்கு வெகுவிரைவிலே பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் தொகுதி மக்களுடைய நலன் கருதி இரண்டு ஆண்டுகளில் 20 புதிய வழித்தடப் பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியவாறு சிதம்பரத்திலிருந்து நேரடியாக கோயம்புத்தூருக்கு பேருந்து இயக்க மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூருக்கு பேருந்து விரைவிலே இயக்கப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

திரு. எஸ். செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழக்குறிச்சி ஊராட்சி, நத்தமாடிப்பட்டியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வந்து செல்ல பொதுமக்களுக்கு குறித்த நேரத்தில் காலை 7 மணி, மதியம் ஒன்றரை மணி, மாலை ஏழரை மணி ஆகிய நேரங்களில் சுப்ரமணியபுரம், பொன்மலைப்பட்டி வழியாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய வழித்தடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டியில் இருந்து பூண்டி, புள்ளம்பாடி வழியாக கல்லக்குடிக்கும், அதேபோன்று, அரியலூரில் இருந்து கல்லகம், மால்வாய், திரணிப்பாளையம் வழியாக பாடாலூருக்கும், திருச்சியிலிருந்து சமயபுரம், புரதாக்குடி, கண்ணாக்குடி, தாப்பாய், கல்லக்குடி வழியாக அரியலூருக்கும், அதேபோன்று திருச்சி, புள்ளம்பாடி, தாப்பாய் வழியாக கருடமங்கலத்திற்கும் கலைஞருடைய கடந்த ஆட்சிக்காலத்தில் . . .

2013 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி சிதம்பரம் வழித்தடத்தைப் பற்றியது. நீங்கள் அதையொட்டி கேள்வி கேளுங்கள். தமிழ்நாடு முழுவதற்கும் கேட்காதீர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

முற்பகல் 11–05

திரு. அ. சௌந்தரபாண்டியன்: கலைஞருடைய கடந்த ஆட்சிக் காலத்தில் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. ** பொது மக்களின் நலன் கருதி அந்த வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்கிவைக்க. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலுள்ள குளச்சல் பகுதியிலிருந்து வேளாங்கண்ணிக்கு அநேக மக்கள் சென்று வருகிறார்கள். அந்தப் பகுதி மக்கள் அந்தப் புண்ணியத் தலத்திற்கு எளிதில் சென்று வருவதற்குப் பேருந்து வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நேரடியாகச் சென்று பணிமனைவாரியாக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களோடு சேர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, எந்தெந்த வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்கின்ற தேவைகளை கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகச் சிறப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவோடு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. முந்தைய மைனாரிட்டி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தி.மு.க. ஆட்சியில் இயக்கப்பட்ட மொத்த இயக்கப் பேருந்துகளுடைய எண்ணிக்கை 19,110. இந்த இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள், அடித்தட்டு மக்கள், அனைத்துப் பகுதி மக்களும் சீரான பேருந்து வசதிகளைப் பெற வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு இன்று இயக்கப்படுகின்ற இயக்கப் பேருந்துகளுடைய எண்ணிக்கை, 20,584. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் எங்கெல்லாம் பேருந்து வசதி தேவையோ அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்தப் பகுதிகள் படிப்படியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்த வழித்தடங்களிலும் ஆய்வு செய்யப்பட்டு, பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

வீட்டுமனைப் பட்டா

***19873—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதியில் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS